# SRI DURGADEVI DEVASTHANAM INC

Inc. in NSW Registration Number: INC 9878192 ABN: 55768913767
21 – 23 Rose Crescent Regents Park 2143 Tel No. 9644 6682 9746 9724
www.sydneydurga.com


# சைவ சமய அறிவுப் போட்டி

## கீழ்ப் பிரிவு
## (7 வயது முதல் 9 வயது வரை)

## மாதிரிக்கேள்விகள்

| | | |
|---|---|---|
| 1 | உங்கள் சமயம் எது? | சைவ சமயம் |
| 2 | சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடுபவர்களை எப்படி அழைப்பீர்கள்? | சைவர்கள் என அழைப்போம். |
| 3 | சைவ சமயத்தில் முழுமுதற் கடவுள் என்று கொள்ளப்படுபவர் யார்? | சிவபெருமான். |
| 4 | சிவபெருமான் எப்படிப் பட்டவர் என்று சைவ சமயம் கூறுகிறது? 2 விடயம் கூறுக. | சிவபெருமான் என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர் அன்பு வடிவானவர் (எல்லா உயிர்களையும் காப்பவர்) எனச் சைவ சமயம் கூறுகிறது. |
| 5 | சிவபெருமானை வேறு எந்தப் பெயர்களினால் அழைப்பீர்கள்? 4 கூறுக. | அமலன் அரன் அந்திவண்ணன் அங்கணன் அங்கணாளன் அமலன் அமுதவேணி ஆலமுண்டோன் ஆதிநாதன் ஆதிரையான் ஆதிசிவன் இடபக்கொடியோன் ஈசன் ஈசுவரன் உத்தரன் ஐந்துமுகன் முக்கண்ணன் கங்கைவேணியன் கங்காதரன் |
| 6 | சிவபெருமான் தலையில் அணிந்துள்ளவை எவை? | பிறைச் சந்திரன், கங்கை |
| 7 | சிவனின் கழுத்தை அலங்கரிப்பது எது? | அரவம் - பாம்பு – நாகபாம்பு |
| 8 | சிவராத்திரி எந்த மாதத்தில் வருகிறது? | மாசி மாதத்தில் |
| 9 | நாம் கடவுளை வணங்குவதற்குச் செல்லும் இடம் எது? | கோயில் |
| 10 | கோயில் இல்லாத ஊரில் ................. என்று தொடங்கும் ஒரு பழமொழி உண்டு. அதைச் சொல்லவும். | கோயில் இல்லாத ஊரில் குடி இருக்க வேண்டாம் என்பது அந்தப் பழமொழி. |
| 11 | கோயில் திருவிழா ஆரம்பமாகும் முதல் நாள் என்ன விசேடம் (விசேஷம்) நடைபெறும்? | கோடி ஏற்றம் நடைபெறும். |
| 12 | கோயில் வாசலை அலங்கரிப்பது எது? | கோயில் கோபுரம் |
| 13 | கோயிலை அடைந்ததும் எதைப் பார்த்து முதலில் கும்பிட வேண்டும்? | கோயில் கோபுரத்தைப் பார்த்து முதலில் கும்பிட வேண்டும். |
| 14 | பிள்ளையாரை எப்படிக் கும்பிடவேண்டும்? | கைவிரல்களை மடக்கி நெற்றியில் மூன்று முறை குட்டித் தோப்புக்கரணம் போட்டுக் கும்பிடவேண்டும். |
| 15 | காத்தல் தொழிலைச் செய்யும் கடவுளின் பெயரைக் கூறவும். | திருமால் |
| 16 | சிவபெருமானின் இடப்பக்கத்தில் இருக்கும் தெய்வத்தின் பெயரைக் கூறுக. | உமாதேவியார் |

| | | |
|---|---|---|
| 17 | பிள்ளையாருக்கு வேறு இரண்டு பெயர்களைக் கூறவும். | கணபதி, விநாயகர், ஐங்கரன் ஆனைமுகன் ஏகதந்தன் கரிமுகன் ஆகீசன் மதகரி ஆகுவாகனன் மதங்கன் |
| 18 | கயமுகாசுரனை வதம் செய்த கடவுளின் பெயரைக் கூறவும். | விநாயகப் பெருமான். |
| 19 | படைத்தல் தொழிலைச் செய்யும் கடவுளின் பெயரைக் கூறவும். | பிரம்மா |
| 20 | பிரம்மாவிற்கு வேறு பெயர்கள் கூறுக. | நான்முகன், பங்கயன், மலரோன் |
| 21 | திருமாலுக்கு வேறு பெயர் 4 கூறுக. | கோவிந்தன், வெங்கடேசுவரர், (வெங்கடேஸ்வரர்) முகுந்தன், முரளீதரன், மதுசூதனன், கடல்வண்ணன், உலகளந்தோன், மாதவன், நாராயணன், கேசவன், சிறீரங்கநாதன், உலகமுண்டோன். |
| 22 | முருகப் பெருமானின் கொடியில் உள்ள பறவை எது? | சேவல் |
| 23 | முருகப் பெருமானுக்கு உகந்த விரத நாள்கள் எவை? | கந்தசட்டி (கந்தசஷ்டி) விரத நாள்கள் ஆகும். |
| 24 | முருகப் பெருமானுக்கு வேறு பெயர்கள் 4 கூறுக. | ஆறுமுகன் சேந்தன் சரவணபவன் கார்த்திகேயன் சுப்பிரமணியன் மயில்வாகனன் கந்தன் செவ்வேள் வடிவேலன் கடம்பன் அயிலவன் கலையறிபுலவன் வேலாயுதன் |
| 25 | அம்மை அப்பனை – அதாவது – சிவபெருமானையும் உமாதேவியாரையும் சுற்றி வந்து மாம்பழத்தைப் பெற்றுக்கொண்ட கடவுள் யார்? | பிள்ளையார் |
| 26 | திருஞானசம்பந்த நாயனாருக்கு ஞானப்பால் ஊட்டிய தெய்வத்தின் பெயரைக் கூறுக. | உமை அம்மை |
| 27 | திருஞானசம்பந்தர் பிறந்த ஊர் எது? | தமிழ் நாட்டில் உள்ள சீர்காழி |
| 28 | தேவாரம் பாடிய மூன்று நாயன்மாரின் பெயர்களையும் கூறுக. | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரச நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார். |
| 29 | திருநீறு எதில் இருந்து செய்யப்படுகிறது? | பசுவின் சாணத்திலிருந்து செய்யப்படுகிறது |
| 30 | நவராத்திரி என்பது எதைக் குறிக்கின்றது. | ஒன்பது இரவுகளைக் குறிக்கின்றது |
| 31 | கோயில் திருவிழாவில் பெரு விழா எது? | தேர்த் திருவிழா |
| 32 | சகலகலாவல்லி மாலையைப் பாடியவரின் பெயரைக் கூறுக. | குமரகுருபர சுவாமிகள் |
| 33 | நவராத்திரி காலத்தில் முதல் மூன்று நாள்களில் எந்த சத்திக்கு விசேட பூசை நடைபெறும். | துர்க்கை அம்மனுக்கு விசேட பூசை நடைபெறும். |
| 34 | தேவாரம் பாடிய நாயன்மார் மூவரின் பெயரையும் கூறுக. | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருநாவுக்கரசு நாயனார் சுந்தரமூர்த்தி நாயனார் |
| 35 | சிவபெருமானை நினைந்து விசேடமாகச் சைவர்களால் கொண்டாடப்படும் இரண்டு தினங்கள் கூறுக. | சிவராத்திரி, ஆருத்திரா தரிசனம் |
| 36 | திருநீறு - இதற்கு இன்னுமொரு பெயர் கூறுக. | விபூதி |
| 37 | சிவபுராணத்தின் முதல் வரியைக் கூறுக. | நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க |

# SRI DURGADEVI DEVASTHANAM INC

Inc. in NSW Registration Number: INC 9878192 ABN: 55768913767
21 – 23 Rose Crescent Regents Park 2143 Tel No. 9644 6682 9746 9724
www.sydneydurga.com


| | | |
|---|---|---|
| 38 | சிவபுராணத்தை அருளிய நாயனார் யார்? | மாணிக்கவாசக சுவாமிகள் |
| 39 | முருகக் கடவுளுக்குரிய விசேட தினம் ஒன்று கூறுக. | கந்தபுராணம் |
| 40 | மாசி மகத்தின் சிறப்பு யாது? | துர்க்கை அம்மனுக்கு விசேட தீர்த்தம் - பூசை செய்யப்படும் தினம் |
| 41 | சிவசின்னங்கள் எவை? | விபூதி – (திருநீறு) – சந்தனம் குங்குமம் உருத்திராக்கம். |
| 42 | இந்த உலகத்தையும் அதிலுள்ள உயிரனங்களையும் படைத்தவர் யார்? | கடவுள் |
| 43 | ஐங்கரன் என்று அழைக்கப்படுபவர் யார்? | பிள்ளையார் |
| 44 | கோயிலை எப்படி வலம் வர வேண்டும். | இடப் பக்கம் இருந்து வலப்பக்கமாகச் சுற்றி வலம் வர வேண்டும். |
| 45 | கோயிலில் எவற்றைப் பாட வேண்டும்? | தேவாரம், திருவாசகம், தோத்திரப் பாடல்கள் முதலியவற்றைப் பாடவேண்டும். |
| 46 | நெற்றியில் பூசிய பின்பு எஞ்சிய திருநீற்றை என்ன செய்வீர்கள்? | உடம்பில் பூசவேண்டும். கீழே கொட்டாது பத்திரப்படுத்த வேண்டும். |
| 47 | மாணவர்களிடம் இருக்க வேண்டிய நல்ல குணங்கள் 3 கூறுக. | கடவுளைத் தினமும் வழிபடல், எப்பொழுதும் உண்மை பேசுதல், ஒருவரின் உடலுக்கோ மனதிற்கோ துன்பம் விளைவிக்காதிருத்தல், எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்துதல், பெரியோரைக் கனம் பண்ணுதல், பெற்றோர் – ஆசிரியர்களின் சொற்படி கேட்டல், |
| 48 | | |
| 49 | | |
| 50 | | |